## யாழ்ப்பாணம் கீரிமலைப் பகுதியில் காணி அளவீடு!

# நில அளவைத் திணைக்கள வாகனத்தை மறித்து காணியுரிமையாளர்கள் ஒன்றுகூடிப் போராட்டம்





யாழ்ப்பாணம் கீரிமலைப் பகுதியில் காணி அளவீட்டுக்குச் சென்ற நில அளவைத் திணைக்களத்தினருக்கு எதிராக காணி உரிமையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனையடுத்து நில அளவை திணைக்களத்தினர் திரும்பிச் சென்றனர்.

யாழ்ப்பாணம் -கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதியை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கும் நோக்கில் இன்றைய தினம் அளவீடு செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து ஒன்றுகூடிய காணி உரிமையாளர்கள், நில அளவைத் திணைக்களத்தினரின் வாகனத்தை மறித்து கோங்களை எழுப்பினர். இதன்போது அப் பகுதியில்

2▶

மாலைக்கதிர்
Maalaikkathir

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி
A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 28 வெள்ளிக்கிழமை 15.12.2023 கதிர் 135

# பொதுஜன பெரமுனவின் தலைவராக மீண்டும் மஹிந்த ராஜபக்ச தெரிவு!



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவராக மஹிந்த ராஜபக்ச இரண்டாவது தடவையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இன்று நடைபெறும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இரண்டாவது மாநாட்டில், மஹிந்த ராஜபக்சவின் பெயரை நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே முன்மொழிய, அதனை ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ வழிமொழிந்திருந்தார்.

## ஜனவரியில் சீனாவின் மற்றுமொரு ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வரும்!

அடுத்தாண்டு ஜனவரியில் சீனாவின் மற்றுமொரு ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வரவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கான கோரிக்கையை சீன அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் விடுத்துள்ளதாக இந்துஸ்தான் டைம்ஸ் இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

சிங் யாங் ஹொங் 3 என பெயரிடப்பட்டுள்ள இந்த ஆய்வுக் கப்பல் ஜனவரி 5ஆம் திகதி முதல் மே மாதம் வரை இந்தியப் பெருங்கடலில் ஆய்வுப் பணியில் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் இலங்கை மற்றும் மாலைதீவுத் துறைமுகங்களில் சீனக்கப்பல்

2▶

## மயங்கி விழுந்து நேற்றும் ஒரு முதியவர் உயிரிழப்பு

**இரண்டு நாட்களில் மூவர் உயிரிழப்பு**

யாழில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த போது மயங்கி விழுந்த முதியவர் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி அல்வாயை சேர்ந்த வள்ளி சின்னத்தம்பி (வயது 61) எனும் முதியவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 11ஆம் திகதி

2▶

## கஜன் எம்.பிக்களைத் தடுத்து நிறுத்தி சண்டித்தனம் செய்த அம்பிட்டிய தேரர்



மட்டக்களப்பு, மயிலத்தமடு - மாதவனைப் பகுதிக்குச் சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோரை சிங்களக் குடியேற்றவாசிகள் தடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் கடும் சொற்பிரயோகங்களுடன் அவர்களுடன் வாக்கு-வாதத்தில் ஈடுபட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கால்நடை மேய்ச்சல் தரையான மயிலத்தமடு - மாதவனைப் பகுதியில் மகாவலி அதிகார சபையால் சட்டவிரோத சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சட்டவிரோத குடியேற்றவாசி களை அப்புறப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், நீதிமன்றமும் கட்டளையிட்டும், சட்டவிரோத குடியேற்றவாசிகள் அங்கிருந்து நகரவில்லை.

குறிப்பிட்ட பகுதிக்கு மாடுகளை மேய்ச்சலுக்குக் கொண்டு செல்வதில் உள்ள சவால்களைச் சுட்டிக்காட்டி, பண்ணையாளர்கள் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தலும்

2▶

## 7 பொலிஸ் பொறுப்பதிகாரிகளின் போலி சீல்களுடன் ஒருவர் கைது!

7 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரர்களின் போலி உத்தியோகபூர்வ முத்திரைகளை (சீல்கள்) வைத்திருந்த நாரஹேன்பிட்டியைச் சேர்ந்த ஒருவரை கொலைக் குற்ற மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

ஹோமாகம, கினிகத்தேனை, இரத்தினபுரி, வெயங்கொடை மற்றும் கந்தானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளின் உத்தியோகபூர்வ முத்திரைகளுக்கு நிகரான முத்திரைகள் இந்நபரிடம் காணப்பட்டன.

நாரஹேன்பிட்டி, தாபரே மாவத்தைப் பகுதியில் போலி ஆவணங்கள், போலி சாரதி

2▶

## பற் சிகிச்சை வழங்கும் விசேட செயற்றிட்டம்



வடமாகாணத்திலுள்ள மக்களுக்கு சிறந்த பற் சிகிச்சைகளை வழங்கும் வகையில் விசேட செயற்றிட்டம் ஒன்று இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண பல் மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த விசேட செயற்திட்டம் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் இன்று ஆரம்பமானது.

இந்தியாவிலிருந்து சிறந்த பற் சிகிச்சை வைத்தியர்கள் யாழ்ப்பாணத்திற்கு வரவழைக்கப்பட்டு,

வடமாகாணத்திலுள்ள

2▶

## கஜன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஈடுபட்டுள்ளனர். மேய்ச்சல் தரை உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்களின் மாடுகளை இலக்கு வைத்து சுட்டுக் கொல்லப்படும் சம்பவங்களும் பதிவாகி வருகின்றன.

இந்தப் பின்னணியில் இன்று நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் மயிலத்தமடு - மாதவனைப் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

அவர்களின் பயணம் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த போதும், முன்கூட்டியே தகவலறிந்த சிங்கள சட்டவிரோத குடியேற்றவாசிகள் வளமண்டி பாலத்தில் வீதித் தடைகளை ஏற்படுத்தி, பாலத்தை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அம்பிட்டிய சுமண ரத்ன தேரர், அங்கு வந்து கடும்போக்கில் நடந்து கொண்டார். நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடகங்களுடன் பேசிக் கொண்டிருந்த போது, கத்திக் கூச்சலிட்டு ரகளையில் ஈடுபட்டார். இதையடுத்து, கஜேந்திரகுமார் தரப்பினர் மேற்கொண்டு நகராமல் பொலிஸார் தடையேற்படுத்தியிருந்தனர்.

இந்தப்பயணத்துக்கு முன்னதாக, மயிலத்தமடுவுக்குச் செல்வதற்குக் கரடியனாறு பொலிஸாரிடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று அனுமதி கோரியிருந்தனர். அதற்கு, கரடியனாறு பொலிஸார் மறுப்புத் தெரிவித்தனர். இதையடுத்து, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்றே, ஜனாதிபதி செயலாளரைத் தொடர்பு கொண்டு விடயத்தைத் தெரிவித்தார். இந்த நாட்டில் யாரும் எங்கும் செல்வதற்கு அனுமதியுண்டு என்றும், நீங்கள் மயிலத்தமடு செல்லலாம் என்றும் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, பொலிஸ் உயர்மட்டத்திலிருந்தும் இதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எனினும், இன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பினர் மயிலத்தமடு சென்ற போது, பொலிஸாரால் வழிமறிக்கப்பட்டார். ஜனாதிபதி கடந்த ஒக்டோபரில் எடுத்த தீர்மானத்தின்படி யாரும் அங்கு செல்ல முடியாது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதையடுத்து, கஜேந்திரகுமார் ஜனாதிபதியின் செயலாளரைத் தொடர்பு கொண்டு விடயத்தைத் தெரிவித்தார். யாரும் உங்களை மறிக்க முடி யாது எனத் தெரிவித்த ஜனாதிபதியின் செயலாளர், உரிய தரப்பினரைத்தொடர்புகொண்டுவிட்டு, மீளஅழைப்பதாக தெரிவித்திருந்தார். எனினும், அவர் மீண்டும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு அழைப்பேற்படுத்தவில்லை. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பலமுறை அழைத்த போதும், பதிலளிக்கவில்லை. சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் வரை அங்கு காத்திருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பினர், மீண்டும் திரும்பி வந்தனர். (அ)

## நில அளவை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸார் குவிக்கப்பட்டனர். தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள நகுலேஸ்வரம் (ஜே-226), காங்கேசன்துறை (ஜே-233) கிராம சேவகர் பிரிவுகளில் 29 ஏக்கர் நிலம் அளவீடு செய்யத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆழ்வான்மலையடி, வேலர்காடு, புண்ணன்புதுக்காடு, பத்திராயான் மற்றும் புதுக்காடு, சோலை சேனாதிராயன் என அழைக்கப்படும் பகுதிகளிலேயே இந்த நில அளவீடு இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதோடு இன்று முதல் தொடர்ச்சியாக அளவீடு இடம்பெறும் எனவும் தகவல்கள் வெளியாகியிருந்தன (01)

## ஜனவரியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நங்கூரமிடும் என்றும், அதற்காக இலங்கை மற்றும் மாலைதீவு அரசாங்கங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த கப்பலுக்கு கடல் ஆய்வு நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்குவது பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என இந்திய அரசாங்கம் கவலை வெளியிட்டுள்ளது. (04)

## மயங்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துவிச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த வேளை வீதியில் திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

மயங்கி விழுந்தவரை வீதியில் சென்றவர்கள் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில், நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அதேவேளை கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் -பொன்னாலை மற்றும் பலாலி ஆகிய பகுதிகளை சேர்ந்த இரு முதியவர்கள் திடீரென மயங்கி விழுந்த நிலையில் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 7 பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனுமதிப்பத்திரங்களை வைத்திருந்த நபர் ஒருவரைக் கைது செய்து விசாரணை நடத்

திய போதே அவரிடம் மேற் படி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளின் உத்தியோகப்பூர்வ முத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நாராஹேன்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த 66 வயதுடையவர் ஆவார். சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து, மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் உதவி ஆணையாளர்களின் உத்தியோகபூர்வ முத்திரைகள், பல்வேறு தனியார் நிறுவனங்களின் உத்தியோக பூர்வ முத்திரைகள், சட்டத்தரணிகளின் உத்தியோக பூர்வ முத்திரைகள் என்பனவும் அவரிடமிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்த போலி முத்திரையை பயன்படுத்தி போலிச் சாரதி அனுமதிப்பத்திரங்களை இவர் தயாரித்து வந்துள்ளமையும், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் கடிதங்களையும் போலியாக தயாரித்துள்ளதாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (ரெதி-09)

## பற் சிகிச்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பல் வைத்தியர்களுக்கு நவீன பற்சிகிச்சை தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, தொழிலதிபர் க.பாஸ்கரன், பல் வைத்தியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பண்டோரா பேப்பர்ஸ் தரவுகளில் பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ்

கடல் கடந்து பல சொத்துக்களை வைத்திருக்கும் நபர்கள்பட்டியலைபண்டோராஆவணம்வெளியிட்டுள்ள நிலையில் அதில் இலங்கையின் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ், லண்டனில் சொத்துக்களை வைத்திருக்கும் இரண்டு பிரிட்டிஷ் வேர்ஜின் தீவுகளின் நிறுவனங்களுக்குச் சொந்தமானவர் என்பதை புலனாய்வுப் பத்திரிகையாளர்களின் சர்வதேசக் கூட்டமைப்பான பண்டோரா பேப்பர்ஸ் தரவு காட்டியுள்ளது.

200 க்கும் மேற்பட்ட நாடுகளில் அரசியல்வாதிகள், பிரபலங்கள், வணிகர்கள் மற்றும் குற்றவாளிகளின் நிதி ஒப்பந்தங்கள் மற்றும் மறைக்கப்பட்ட சொத்துக்களை அம்பலப்படுத்தும் வகையில் பண்டோரா ஆவணம் பல விடயங்களை வெளியிட்டு வருகின்றது.

அதன்படி பொது பாதுகாப்பு அமைச்சரின் ப்ரொம்ப்டன் ப்ரொப்பர்டீஸ் லிமிடெட், லண்டனில் உள்ள ஒரு வசதியான பகுதியில் 2006 இல் சுமார் 960,000 டொலருக்கு வாங்கப்பட்டதாகவும் இரண்டாவது பான்ஹாம் வென்ச்சர்ஸ் லிமிடெட், 2008 ஆம் ஆண்டு வாங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெரிய வெங்காயத்தின் விலை அடுத்த வாரம் குறைவடையும்?



பண்டிகைக் காலத்தில் வெங்காயத்தின் தேவை அதிகரித்துள்ள நிலையில், இந்தியாவின் ஏற்றுமதி கட்டுப்பாடுகள் மற்றும் பாகிஸ்தான் வெங்காயத்தின் மீதான கட்டுப்பாட்டு விலை ஆகியன காரணமாக வெங்காயத்தின் விலை உயர்ந்துள்ளது என வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பி. அத்தபத்து தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினால் இந்திய அரசாங்கத்திடம் மூன்று மாதங்களுக்கு தேவையான பெரிய வெங்காய கையிருப்பு கோரி, இந்திய உயர்ஸ்தானிகர் ஊடாக எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் செயலாளர் தெரிவித்தார்.

அவ்வாறே பெரிய வெங்காயம் இறக்குமதி தொடர்பாக பாகிஸ்தான் அரசாங்கத்திடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், சீனா, நெதர்லாந்து போன்ற நாடுகளிலிருந்து தனியார் துறையினரும் பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்ய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, அடுத்த வாரத்திற்குள் தேவையான அளவு பெரிய வெங்காயம் கிடைக்கும் எனவும், இதனால் விலை குறைப்பும் ஏற்படும் எனவும் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெதி-11)




## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

**உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட**
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

**காலைக்கதிர் TV YouTube தளம்**





# திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் ஒளிவிழா

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒளி விழா நிகழ்வானது மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி அவர்களின் தலைமையில் நேற்று மாவட்ட செயலக புதிய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடை பெற்றது. இதன் போது சிறுவர் சிறுமிகளின் கலை நிகழ்வுகளும் மேடையை அலங்கரித்தன.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளை சிறப்பாக வழங்கிய சிறுவர் சிறுமிகளுக்கு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் அதிகாரிகளினால் நத்தார் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.சுதாகரன், மாவட்ட செயலக பதவி நிலை அதிகாரிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## புலமைப் பரிசிலில் 174 புள்ளிகள் மருதமுனை மாணவன் சிறப்பு

(நூருல் ஹுதா உமர்)



நடந்து முடிந்த 2023 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் கல்முனை கல்வி வலய மருதமுனை கமு.கமு. அல்- ஹம்றா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவன் டிஸ்னித் முஹம்மட் 174புள்ளிகளைப்பெற்று பாடசாலைக்கும்தனது பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இவர்மருதமுனையைச்சேர்ந்தயஹ்ஸர்அபான், பாத்திமா பஸ்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராவார். இம்மாணவன் பெற்ற புள்ளியானது மருதமுனைப் பாடசாலைகளில் மாணவர்களுக்கிடையில் பெறப்பட்ட அதி கூடிய புள்ளியாகும்.

## கல்முனை வலயத்தில் கார்மேல் பற்றிமா மாணவர்கள் அணி முதலிடம் பெற்றது



(வி.ரி. சகாதேவராஜா)


கல்முனை வலயக்கல்விப் பணிமனை நடாத்திய செயற்பட்டு மகிழ்வோம் - தரம் 5 க்கான வலய மட்ட போட்டியில் முதலாம் இடத்தை கல்முனைகார்மேல்பற்றிமாகல்லூரி அணி பெற்றுக் கொண்டது.

இவ்வலயமட்டப் போட்டி பாண்டிருப்பு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

செல்வன் பி.ஹேசித் உள்ளிட்ட குழுவினர் இவ்வாறு முதலிடம் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி மாணவர்கள் கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ச.இ. ரெஜினோல்ட் வழிகாட்டலில், பிரதி அதிபர் அருட்சகோதரி எம். பிரியசாந்தியின் நெறிப்படுத்தலில் இப்போட்டியில் பங்கேற்றிருந்தனர்.





# இலக்குகள் எட்டப்படும்வரை உக்ரைன் போர் தொடரும்! ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் திட்டவட்டமாக அறிவிப்பு

உக்ரைன் தொடர்பான தங்களது இலக்குகள் எட்டப்படும்வரை அங்கு ஏறத்தாழ 2 ஆண்டுகளாக நடைபெற்று வரும் போா தொடரும் என்று ரஷ்ய அதிபாவிளாடிமிர் புடின் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளாா.

ஒவ்வோா ஆண்டின் முடிவிலும் அவா நாட்டு மக்களிடையே உரையாடுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான அந்த நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. 4 மணி நேரத்துக்கும் மேல் நீடித்த அந்த நிகழ்ச்சியில் புடின் உரையாற்றியிருந்தார்.

அவரது உரையின்போது, உக்ரைனில் மேற்கொள்ளப்பட்டு வரும் 'சிறப்பு ராணுவ நடவடிக்கை'க்காக மீண்டும் 2ஆவது முறையாக மிகப் பெரிய படைகளை அங்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை.

அங்கு ஏற்கெனவே 6.17 லட்சம் ரஷ்ய ராணுவ வீராகள் செயலாற்றி வருகின்றனா. அவாகளுக்கு பக்கபலமாகப் போரிட, சுமாா 2.44 லட்சம் போ அழைக்கப்பட்டுள்ளனா.

உக்ரைன் தொடாபான நமது இலக்குகள் அனைத்தும் எட்டப்பட்டவுடன் அங்கு அமைதி திரும்பும். அதற்கான உடன்பாட்டை உக்ரைன் மேற்கொள்ளும்வரை போா தொடரும்.

உக்ரைன் போரில் ரஷ்யா பல்வேறு வெற்றிகளைப் பெற்று வருகிறது. இறுதி வெற்றியும் நம்முடையதாகத்தான் இருக்கும்.

நமது எதிரி நாடு (உக்ரைன்) மாபெரும் எதிர்த் தாக்குதலை அறிவித்தது. ஆனால், அத்தகைய எதிர்த் தாக்குதல் நடவடிக்கை மூலம் அந்த நாட்டுக்கு இதுவரை எதுவுமே கிடைக்கவில்லை.

நீப்பா நதியின் கிழக்குக் கரையுடன் பால இணைப்பை உருவாக்க உக்ரைன் படையினா அண்மையில் முயன்றனா. ஆனால், இந்த முயற்சி படுதோல்வியடைந்தது. இதில் ஏராளமான வீரர்களையும் உக்ரைன் இழந்தது.

போரில் முன்னேற்றம் காண்பதைப் போன்ற தோற்றத்தைதங்களுக்குநிதியுதவி,ஆயுதஉதவிகளை அளித்து வரும் மேற்கத்திய நாடுகளிடம் ஏற்படுத்துவதற்காக, தங்களது ராணுவ வீர்களை உக்ரைன் அரசு பலிகொடுத்து வருகிறது. இது அந்த நாட்டு அரசியல் தலைமையின் (அதிபா வொலோடிமீா ஸெலென்ஸ்கி) முட்டாள்தனத்தையும், பொறுப்பற்ற தன்மையையும் காட்டுகிறது, என்றாா புடின்.

தங்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவது தங்களின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று ரஷ்யா கருதுகிறது.

இருந்தாலும், உக்ரைனின் தற்போதைய அரசு நேட்டோவில் இணைய ஆர்வம் காட்டி வந்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து உக்ரைன் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி படையெடுத்தது.

அப்போது, கிழக்கு உக்ரைன் மக்களை உக்ரைன் படையினரிடமிருந்து பாதுகாக்கவும், உக்ரைன் அரசு மற்றும் ராணுவத்திலுள்ள நாஜி ஆதரவு சக்திகளை ஒடுக்குவதற்காகவும் 'சிறப்பு ராணுவ நடவடிக்கை' மேற்கொள்ளப்படுவதாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் அறிவித்திருந்தார்.

(04)

# ஐரோப்பாவில் யூத நிறுவனங்களை தாக்கும் திட்டம்

## ஹமாஸ் உறுப்பினர்கள் உட்பட 7 பேர் கைதாகினர்



ஐரோப்பாவில் உள்ள யூத நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்த திட்டம் தீட்டியதாக டென்மார்க், ஜெர்மனி மற்றும் நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகளில் ஹமாஸ் உறுப்பினர்கள் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் மூன்று பேர் ஜெர்மனி தலைநகர் பெர்லினிலும், மற்றொருவர் நெதர்லாந்திலும், மூவர் டென்மார்க்கிலும் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த மூன்று கைது நிகழ்வுகளுக்கும் இடையே ஏதேனும் தொடர்புகள் உள்ளனவா என்று விசாரணை நடைபெற்று வருகிறது.

ஜெர்மனி மற்றும் நெதர்லாந்தில் கைது செய்யப்பட்ட நால்வருக்கும் ஹமாஸ் இயக்கத்துடன் நேரடி தொடர்பு இருப்பதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

டென்மார்க்கில் கைது செய்யப்பட்ட மூவரும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன்நிறுத்தப்படுவார்கள் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இந்த கைது சம்பவம் குறித்து கருத்து தெரிவித்துள்ள ஜெர்மனி சட்டத்துறை அமைச்சர் மார்கோ புஷ்மேன், இஸ்ரேலிய மக்கள் மீது ஹமாஸ் நடத்தும் பயங்கர தாக்குதல்களைத் தொடர்ந்து, யூத நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் சமீப வாரங்களில் ஜெர்மனியிலும் அதிகரித்துள்ளன. எனவே நம் நாட்டில் உள்ள யூதர்கள் தங்கள் பாதுகாப்பிற்காக பயப்பட வேண்டியதில்லை என்பதை உறுதிப்படுத்த எங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும், என்று கூறியுள்ளார். (04)



# பாகிஸ்தானில் ஆவணங்களின்றி தங்கியிருக்கும் ஆப்கன் அகதிகள் வெளியேற காலக்கெடு நீடிப்பு

பாகிஸ்தானில் உரிய ஆவணங்கள் இல்லாமல் தங்கியிருக்கும் ஆப்கன் அகதிகள் வெளியேறுவதற்கான காலக்கெடு, அடுத்த ஆண்டு பெப்ரவரி 29ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது. கடந்த 1979 - 89 இல் ஆப்கானிஸ்தானை சோவியத் யூனியன் ஆக்கிரமித்ததிலிருந்தே அந்த நாட்டைச் சோந்த சுமாா 17 லட்சம் அகதிகளுக்கு பாகிஸ்தான் அடைக்கலம் அளித்துள்ளது.

இருந்தாலும், அண்மைக் காலமாக ஆப்கன் எல்லையையொட்டிய பகுதிகளில் பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரித்துவருவதாகவும், இதில் ஆப்கன் அகதிகள் அதிக அளவில் பங்கேற்பதாகவும் பாகிஸ்தான் அரசு குற்றஞ்சாட்டி வருகிறது.

அதையடுத்து, உரிய ஆவணங்கள் இல்லாமல் நாட்டில் தங்கியிருப்பவாகள் அனைவரும் வெளியேற வேண்டும் என்று பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்கு மனித உரிமை அமைப்புகளும், ஐ.நா. அகதிகள் நல அமைப்பும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

முன்னதாக, இந்த ஆண்டு இறுதிக்குள் பாகிஸ்தானிலிருந்து ஆப்கன் அகதிகள் வெளியேற காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், இப்போது கூடுதல் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இஸ்லாபாத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், அந்நாட்டின் தற்காலிக பிரதமர் அன்வார்-உல்-ஹக் கக்கர் இந்த முக்கிய முடிவை எடுத்துள்ளார்.

இந்த நிலையில், நீட்டிக்கப்பட்டுள்ள காலக்கெடு முடிந்த பின்னும், ஆப்கன் அகதிகள் பாகிஸ்தானில் சட்ட விரோதமாக தங்கியிருந்தால், அவர்கள் மாதந்தோறும் 100 அமெரிக்க டொலர்கள் வீதம் 8 மாதத்திற்கு அபராதம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாகிஸ்தானில் தங்குவதற்கான சட்டபூர்வ ஆவணங்களை ஆப்கன் மக்கள் பெறவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (04)

# பீஜிங்கில் சுரங்கப்பாதை ரயில்கள் மோதல் 515 பேர் படுகாயமடைந்ததாகத் தகவல்



சீனாவின் தலைநகர் பீஜிங்கில் இரண்டு சுரங்கப்பாதை ரயில்கள் மோதிக் கொண்டதில் 515 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

102 பேருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துக்கு, கடுமையான பனியினால் ரயில் தடங்கள் வழுக்குவதே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வழுக்கும் தடங்களால் முன்னால் சென்ற ரயிலின் தானியங்கி பிரேக் தூண்டப்பட்டுள்ளது. இதனால் பின்னால் வந்த ரயிலும் வழுக்கும் தடங்களில் நிற்க முடியாமல் மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவப் பணியாளர்கள், காவல்துறை மற்றும் போக்குவரத்து அதிகாரிகள் உடனடியாக மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர். கடந்த புதன் கிழமையிலிருந்து பெய்யும் கடுமையான பனியால் சில ரயில்கள் ரத்து செய்யப்பட்டிருப்பதாகவும், பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கடுமையான பனியால் சீனாவில் (-)7 பாகை செல்சியல் அளவில் வெப்ப நிலை நிலவுகிறது. (04)

# நெற் செய்கையின்போது ஏற்படும் நோய்த் தாக்கமும் கட்டுப்படுத்தும் வழிமுறைகளும் பற்றிய விழிப்புணர்வு

(ஹஸ்பர்)

திருகோணமலை பிரதி விவசாய பணிப்பாளரின் பணிப்புரைக்கு அமைய, உதவி விவசாய பணிப்பாளரின் தலைமையின் கீழ், தம்பலகமாம் விவசாய போதனாசிரியர் பிரிவில், புதுக்குடியிருப்பு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட நெல் வயல் நிலங்களில் ஏற்பட்டுள்ள கபில நிற தாவர தத்தி, வெண் முதுகு தாவரத் தத்தி தாக்கத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களை முகாமைத்துவம் செய்து அவற்றை குறைப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்வு குறித்த வயல் நிலப் பகுதியில் இடம்பெற்றது.

தற்போது ஏற்பட்டிருக்கும் தாவரதத்தியின் வெண்முதுகு கபில நிறம் போன்றன நெற்செய்கையின் போது நோய்த் தாக்கத்தை உண்டு பண்ணியுள்ளன. இதில் இருந்து விவசாயிகள் மீள எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் போன்ற விடயங்கள் தொடர்பில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டது.

இது தொடர்பில் உதவி விவசாய பணிப்பாளர் சீ.ஆர்.டி.துஷ்யந்தக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், தம்பலகாமம் பகுதியில் சுமார் 1117 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பெரும் போக விவசாய செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாட்டின் வடகிழக்கு உட்பட பல வயல் பிரதேசங்களில் இந்நோய்த் தாக்கமான கபில நிற வெண்ணிற தாவர தத்தி தாக்கம் ஏற்பட்டுள்ளது. இது அசாதாரண கால நிலை காரணமாக வேகமாகப் பரவி வருகிறது.

இதனை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கான முன்ஆயத்த முறைகளை செயன்முறை பயிற்சி ஊடாக வழங்கி வருவதுடன் ஒலிபெருக்கி மூலமான விழிப்புணர்வுகளையும் விவசாய திணைக்களம் ஊடாக செய்து வருகிறோம், என்றார்.

இந்நோய்த் தாக்கத்தின் பாதிப்பினால் விவசாயிகளாக நாங்கள் நஷ்டமடைந்து வருகிறோம். கிருமி நாசினி பல முறை விசிறினாலும் அதன் தாக்கம் ஓயாத நிலையில் உள்ளது. இதற்கான நிரந்தர தீர்வினை பெற்றுத் தாருங்கள், என விவசாயிகள் இதன் போது தெரிவித்தனர். மருந்துக் கலவைகளை கலந்து நோய் தாக்கத்தை இல்லாதொழிப்பது தொடர்பான செயன்முறை பயிற்சியும் வயல் நிலப்பகுதியில் வைத்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது

இந்நிகழ்வில், உதவி விவசாயப் பணிப்பாளர் சி.ஆர்.டி. துஷ்யந்தி, விவசாயப் போதனாசிரியர் ஏ.எச்.எம். அஸ்கர், தொழிநுட்ப உதவியாளர் கே.செந்தூரன் உட்பட பிரதி விவசாயப் பணிப்பாளர் பணிமனையின் அதிகாரிகள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



## இளங்கலை பட்டதாரிகளின் அமைப்பினால் கல்விப் புலமைப் பரிசில் நிகழ்நிலை அமர்வு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் இளங்கலை பட்டதாரிகளின் அமைப்பானது கல்விப் புலமைப்பரிசில் தொடர்பான அமர்வு ஒன்றை நிகழ்நிலையில் நாளை 16 ஆம் திகதி சனிக்கிழமை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

மேற்படிப்புக்கான புலமைப்பரிசிலை பெறுவதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தும் நோக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந் நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புவர்கள் நிகழ்வுக்கு பொறுப்பான ஹப்ஸானுடன் 078 136 79 29 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு இளங்கலை பட்டதாரிகள் அமைப்பின் செயலாளர் எம்.எப் கதீஜா விஸாம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மல்வத்தை மாணவி ஜினோதிகா தேசிய ரீதியில் மீண்டும் தெரிவு




(வி.ரி.சகாதேவராஜா)

கல்வி அமைச்சு நடாத்திய சர்வதேச ஒலிம்பியாட் கணிதப் போட்டியில் தேசிய மட்டத்தில் தங்கம் வென்று சாதனை படைத்த மல்வத்தை மாணவி ஜினோதிகா, மீண்டும் விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் தேசிய ரீதியில் தெரிவாகியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட, மல்வத்தை விபுலானந்தா மகா வித்தியாலய மாணவி செல்வி சிவரூபன் ஜினோதிகா, ஏலவே கணித ஒலிம்பியாட் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்று சாதனை படைத்திருந்தார்.

இது, சம்மாந்துறை வலயத்தில் சர்வதேச ஒலிம்பியாட் போட்டிகளில் முதல் சாதனையாகும்.

இப்போது விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றி முதல் பத்து வெற்றியாளர்களுள் ஏழாவது இடத்தில் அவர் வந்துள்ளார். இதன் மூலம் இவர் சர்வதேசப் பயிற்சிக்குத் தெரிவாகியுள்ளார்.

கணிதம் மற்றும் விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிகளில் கிழக்கு மாகாணத்தில் தெரிவான முதனிலை மாணவியாக செல்வி ஜினோதிகா விளங்குவது குறிப்பிடத்தக்கது.

அதுவும் ஒரு பின்தங்கிய பிரதேசத்தில் ஏழ்மையான குடும்பச் சூழலில் இத்தேசிய சாதனை படைத்தது அனைவராலும் பாராட்டப்படுகிறது.

சாதனை மாணவியின் தாயார் திருமதி பிரபாஜினி சிவரூபன் கூறுகையில், எனது மகளின் இச்சாதனைக்கு உரமூட்டிய அனைவருக்கும் நன்றிகள். குறிப்பாக, விசேடமாக பயிற்சியளித்து உதவிசெய்த ஓய்வுநிலை விஞ்ஞான ஆசிரியர்களான திரு, திருமதி வசந்தினி நடராசன் ஆகியோருக்கும் நன்றிகள், என்றார்.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டொக்டர் உமர் மௌலானாவும் மாணவிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.



# 2019ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப் பொருள்

## புத்தளம் இன்சி சிமெந்து தொழிற்சாலையில் அழிக்கப்பட்டது

(ரஸீன் ரஸ்மின்)

2019ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட 107 கிலோ ஹெரோயின் போதைப் பொருள் நேற்று (14) புத்தளம் பாலாவி இன்சி சிமெந்து தொழிற்சாலை வளாகத்தில் வைத்து சீமெந்து ஆலை உலையில் இட்டு எரித்து அழிக்கப்பட்டது.

புத்தளம் மாவட்ட நீதவான் மிஹில் சிரந்த சத்துருசிங்கவின் முன்னிலையில் குறித்த ஹெரோயின் போதைப் பொருள் அழிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அழிக்கப்பட்ட ஹெரோயின் போதைப்பொருள் 321 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடையது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடல் மார்க்கமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் பறிமுதல் செய்யப்பட்ட குறித்த ஹெரோயின் போதைப் பொருளுடன் 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இவர்களிடமிருந்து 107 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் 1 கிலோ 104 கிராம் குடு வகையைச் சேர்ந்த போதைப் பொருள் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றம் நிரூபிக்கப்பட்டதை அடுத்து அவர்களுக்கு கடந்த ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப் பொருளை அழிக்க உயர்நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஹெரோயின், கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது.



இந்த நிலையிலேயே, பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் மற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியக அதிகாரிகளின் விசேட பாதுகாப்பில் கொழும்பில் இருந்து புத்தளம் , பாலாவி சீமெந்து தொழிற் சாலைக்கு அது கொண்டு செல்லப்பட்டு அழிக்கப்பட்டது. அழிக்கப்பட்ட ஹெரோயின், அரச பகுப்பாய்வாளர் திணைக்கள அதிகாரிகள் முன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், கொள்கலனில் எடுக்கப்பட்ட 500 லீற்றர் தண்ணீரில் கரைக்கப்பட்டு 2300 வெப்பநிலையில் உலைக்கு கொண்டு செல்லப்பட்டு அழிக் கப்பட்டது.

குறித்த ஹெரோயின் போதைப்பொருள் அழிக்கப்பட்ட புத்தளம் பாலாவி சீமெந்து தொழிற்சாலை வளாகத்தில் பொலிஸாரும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் விசேட பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.


இதன்போது, வடமேற்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கித்சிறி ஜயலத், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் பணிப்பாளர் உள்ளிட்டோருடன் புத்தளம் சீமெந்து தொழிற்சாலை நிர்வாகமும் ஹெரோயின் போதைப் பொருளை அழிப்பதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்







## அல் ஹிதாயா பாடசாலைக்கு முன் தேங்கியுள்ள நீரை அகற்றக்கோரி பாலமுனை இளைஞர் சபை மகஜர்





(எம்.எப். நவாஸ்)

பாலமுனை பிரதான வீதி அல் ஹிதாயா பாடசாலைக்கு முன்னால் அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்தை யொட்டி மழை காலங்களில் வெள்ள நீரானது வழிந்தோட வழியில்லாமல் தேங்கியுள்ளதால் மாணவர்கள், ஆசிரியர்கள், பாதசாரிகள் மற்றும் பேரூந்திற்காக காத்திருக்கும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இது சம்மந்தமாக வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளரிடம் பாலமுனை இளைஞர் சபையினால் மகஜர் ஒன்றினை, அதற்கான நிரந்தரமான தீர்வாக வடிகான் ஒன்றை அமைத்து வழங்குமாறு கேட்டு கையளிக்கப்பட்டது. அதற்கிணங்க உடனடியாக அதற்கான வேலைகளை செய்து தருவதாக வாக்குறுதியும் பெறப்பட்டது.

## பதினொரு மாதங்களில் 449 யானைகள் உயிரிழப்பு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

இலங்கை வரலாற்றில் இந்த வருடத்தில் அதிகமான யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு (2022) மொத்தமாக 439 யானைகள் உயிரிழந்த நிலையில், இந்த வருடத்தின் டிசம்பர் முதலாம் திகதி வரையான 11 மாதங்களில் 449 யானைகள் உயிரிழந்துள்ளன.

இந்த வருடத்தில் பொலன்னறுவை வனவிலங்கு வலயத்தில் 96 யானைகளும், அனுராதபுரம் வனவிலங்கு வலயத்தில் 82 யானைகளும், கிழக்கு வனவிலங்கு வலயத்தில் 86 யானைகளும் உயிரிழந்துள்ளன. இவற்றில் 81 யானைகள் துப்பாக்கி சூடு காரணமாக உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.12.2023இல் வெளியிடப்பெற்றது.